செய்தி வெளியீடு எண்: 17 நாள்: 10.09.2019.

**தேனி மாவட்டம்,**
**போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்**
**ரூ.68.04 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-.**

**********

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அணைக்கரைப்பட்டி, சில்லமரத்துப்பட்டி, சிலமலை மற்றும் மணியம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை இன்று (10.09.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அணைக்கரைப்பட்டி ஊராட்சியில் ஊரக உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் வலசுதுரை முதல் ஆதிஊத்து வரை 5/970 – 7/0 கிலோ மீட்டர் வரை சாலை அமைக்கும் பணி, சில்லமரத்தப்பட்டி ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய பொது நிதி திட்டத்தின் கீழ் ரூ.2.30 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் மற்றும் பைப் லைன் மூலம் குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ள பணி மற்றும் 1-வது வார்டு பகுதியில் கழிவு நீர் அகற்றுதல், கழிவு நீர் வாய்க்கால் சீரமைத்தல் பணி, சிலமலை ஊராட்சியில் ஊரக உட்கட்டமைப்புத்திட்டத்தின் கீழ் ரூ.7.30 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கும் பணி ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், சிலமலை ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சிலமலை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மணியம்பட்டி ஊராட்சியில் குடிமராமத்துத்திட்டத்தின் கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் சப்பாணி குளம் கண்மாய் சீரமைக்கும் பணி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.22 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டி பணி, ரூ.6.22 இலட்சம் மதிப்பீட்டில் குதுவல் பகுதியில் மியா வாக்கி முறையில் 3,250 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ள பணிகள் என போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மேற்கண்ட பணிகள் தொடர்பாக மொத்தம் ரூ.68.04 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வின்போது, மணியம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கண்பார்வையற்ற திரு. செல்வக்குமார் அவர்கள் விலையில்லா வீட்டுமனைப்பட்டா வேண்டி மாவட்ட ஆட்சித்லைவர் அவர்களிடம் மனு அளித்தார். மேற்கண்ட மனுவினை உடனடி பரிசீலனை செய்து ஒரு வாரத்திற்குள் வீட்டுமனைப்பட்டா வழங்கி, முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு வழங்கிடவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

*மேலும், நடைபெற்று வரும் அனைத்து பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வர, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.*

*இந்த ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் எஸ்.கவிதா, உதவி ஆட்சியர் (பயிற்சி) எஸ்.பாலச்சந்தர், இ.ஆ.ப., வட்டாட்சியர் மணிமாறன், வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ் உட்பட சம்மபந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.*

***வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***